# அவுஸ்திரேலிய மருத்துவ முறையைப் புரிந்துகொள்ளல்

- மொழிபெயர்ப்பாளர்கள்
- Medicare
- சலுகை அட்டைகள்
- மருத்துவரிடம் செல்லல்
- உங்களது மருந்துகளைப் பெற்றுக்கொள்ளல்
- மருத்துவ நிபுணர்கள்

அவுஸ்திரேலிய மருத்துவமுறை சிக்கலானது. நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தவரோ சுகவீனமுற்றால், உதவியொன்றைப் பெற்றுக்கொள்ள எங்கு செல்ல வேண்டும் என்றும், எவ்வளவு செலவாகும் என்றும் நீங்கள் தெரிந்துகொள்வது கடினமானதாக இருக்கலாம். அவுஸ்திரேலியாவில் உள்ள மருத்துவ முறையைப் பற்றி சற்று மேலதிகமாகப் புரிந்து கொள்ள இந்தத் தகவல் உங்களுக்கு உதவும்.

**விக்டோரியாவில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான குறிப்பு:** மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நீங்கள் இலவசமாக மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றைய மருத்துவ சேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்வதானது நீங்கள் எந்த வீசாவை வைத்திருப்பவர் என்பதைப் பொறுத்தது. நீங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியமை காலப்போக்கில் மாறலாம். எனவே, எந்தெந்த சேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிந்துகொள்ள தயவுசெய்து உங்கள் விடய அலுவலரை (case worker) நாடுங்கள்.

## மொழிபெயர்ப்பாளர்கள்

மொழிபெயர்ப்பாளர் என்பவர் வேற்று மொழி பேசுபவர்களுடன் நீங்கள் பேச உதவுபவர் ஆவார்.

**அவுஸ்திரேலியாவில், மொழிபெயர்ப்பாளர்கள் கல்வி கற்று தங்களது தகைமையைப் பெற்றுக்கொண்ட தொழில் வல்லுநர்கள் ஆவர். மொழிபெயர்ப்பாளர் ஒருவர் ஊடாக நீங்கள் தொடர்பாடலை மேற்கொண்டால், உங்களது உரையாடல் துல்லியமாகவும் அந்தரங்கமானதாகவும் இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம்.**

உங்களது மொழியைப் பேசும் மருத்துவர் ஒருவரை உங்களால் கண்டடைய முடியவில்லை எனில், மொழிபெயர்ப்பாளர் ஒருவரை அணுகுவதற்கு, 131 450 என்ற எண்ணில் **மொழிபெயர்ப்பு மற்றும் பொருள்விளக்க சேவை** (**TIS**) இனை இலவசமாக அழைக்கலாம்.

அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற பலர் சுகாதார அமைப்பில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு மொழிபெயர்ப்பாளர் சேவைகளைப் பயன்படுத்துகின்றனர்.

மொழிபெயர்ப்பாளர் உங்களது தகவலை வேறு எவருக்கும் கொடுக்க மாட்டார். **இது ஒரு இலவச சேவையாகும்.**

மார்ச் 2023 பதிப்பு

## Medicare அட்டை

உங்களிடம் Medicare அட்டை இருந்தால், நீங்கள் கீழே உள்ளன போன்ற, இலவச அல்லது குறைந்த-கட்டண மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்:

- மருத்துவரிடம் பெற்றுக்கொள்ளும் இலவச அல்லது குறைந்த கட்டண சிகிச்சை
- இலவச அல்லது குறைந்த விலையில் மேற்கொள்ளப்படும் எக்ஸ்-ரே மற்றும் இரத்தப் பரிசோதனைகள்
- பொது மருத்துவமனைகளில் பெற்றுக்கொள்ளும் இலவச சிகிச்சை

நீங்கள் ஒரு சுகாதார சேவைக்குச் செல்கிறீர்கள் என்றால், எப்போதும் உங்களது medicare அட்டையை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்.

**Medicare ஆனது பின்வரும் செலவுகளை ஏற்பதில்லை**

- அம்புலன்ஸ் செலவு
- பெரும்பாலான பற்சுகாதார சேவைகள்
- மூக்குக் கண்ணாடிகள்
- தனியார் மருத்துவமனையில் தங்குதல்
- மேலும் ஏனைய சில மருத்துவ சேவைகள் (உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் பொது மருத்துவரிடம் கேளுங்கள்)

சில புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தங்களது வீசா நிபந்தனைகளைப் பொறுத்து Medicare இனைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவலுக்கு, விக்டோரியன் அகதிகள் சுகாதார வலையமைப்பைத் (Victorian Refugee Health Network) தொடர்பு கொள்ளவும்.

## சலுகை மற்றும் சுகாதாரப் பராமரிப்பு அட்டைகள்

**சலுகை மற்றும் சுகாதாரப் பராமரிப்பு அட்டைகள் உங்களுக்கு மலிவான சுகாதார சேவைகளைப் பெற்றுத்தரலாம்.**

உங்களால் சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஓய்வு பெற்றவருக்கான சலுகை அட்டையொன்றைப் பெற்றுக்கொள்ள முடிந்தால், நீங்கள் சில சுகாதார சேவைகளைப் பயன்படுத்தும்போது குறைவான கட்டணத்தைச் செலுத்துவீர்கள்.

எடுத்துக்காட்டாக:

- நீங்கள் சில மருந்துகளை மலிவாகப் பெறலாம்
- பொதுப் பற்சுகாதார சேவையில் மலிவான பற்சிகிச்சையைப் பெறலாம்

மலிவான அல்லது இலவச சேவைகளைப் பெற, உங்கள் சலுகை அட்டையை எப்போதும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள், மேலும் நீங்கள் சுகாதார சேவைகளைப் பயன்படுத்தும் போது அதைக் காட்டுங்கள்.




Medicare card

Medicare அட்டை




Health Care card

சுகாதாரப் பராமரிப்பு அட்டை




Pensioner Concession card

ஓய்வுபெற்றவருக்கான சலுகை அட்டை

# மருத்துவரிடம் செல்லல்

**அவுஸ்திரேலியாவில் குடும்ப மருத்துவர்கள் பொது மருத்துவர்கள் (GPs) என்று அழைக்கப்படுகிறார்கள். சில மருத்துவர்கள் சுகாதார மத்திய நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரிகின்றனர், சிலர் தங்களது சொந்த அலுவலகங்களில் பணிபுரிகின்றனர்.**

நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் அல்லது அவ்வாறாக உணர்ந்தால், நீங்களே ஒரு மருத்துவரைச் சந்திக்கலாம். நீங்கள் உடல் நலமுள்ளவராக உணர்ந்தாலும், உங்களுக்கு உடல்நலப் பிரச்சனைகள் ஏதும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உடல்நலச் சோதனையொன்றை செய்துகொள்ள விரும்பினாலும், நீங்கள் மருத்துவரைச் சந்திக்கலாம்.

நீங்கள் ஆண் அல்லது பெண் மருத்துவர் ஒருவரைத் தேர்வு செய்யலாம்.

நீங்கள் எந்த நேரத்திலும் உங்கள் மருத்துவரை மாற்றலாம். நீங்கள் மாற்றினால், உங்கள் புதிய மருத்துவரிடம் நீங்கள் உட்கொள்ளும் மருந்துகளின் பட்டியலையும், உங்கள் மருத்துவப் பதிவுகளின் நகலையும் கொடுங்கள்.

உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து, இரவில் மருத்துவர் தேவைப்பட்டால், வார இறுதி மற்றும் பொது விடுமுறை நாட்களில் இந்த இலவச மருத்துவ சேவைகளில் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

### தொலைபேசி ஊடான உதவிக்கு

- தொலைபேசி அழைப்பூடான தாதியர் சேவை (Nurse on call) **1300 60 60 24** எனும் எண்ணில் (விக்டோரியாவில்)
- வேலை நேரத்திற்கப்பாலுள்ள பொது மருத்துத்துவர் உதவி எண் **1800 022 222** எனும் எண்ணில்

### மருத்துவர் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வர வேண்டுமெனில்:

- வீட்டுக்கு வரும் மருத்துவர் (The Home Doctor) **13 74 25** எனும் எண்ணில் (விக்டோரியாவில்)

# மருத்துவருக்குக் கட்டணம் செலுத்துதல்

வெவ்வேறு மருத்துவர்களுக்கு வெவ்வேறு அளவு பணம் செலவாகிறது. சில மருத்துவர்கள் 'பல்க் பில்' (**'bulk bill'**) செய்யலாம். பல்க் பில்லிங் என்பதன் பொருள், உங்களிடம் Medicare அட்டை இருந்தால் குறித்தசேவை இலவசம் என்பதாகும்.

நீங்கள் மருத்துவரைச் சந்திக்க முன்பதிவு செய்யும்போது மருத்துவர் பல்க் பில்லிங் செய்கிறாரா என்று கேளுங்கள்.

மருத்துவர் பல்க் பில்லிங் செய்யவில்லை என்றால், உங்களது சிகிச்சைக்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டும். Medicare இல் இருந்து ஒரு குறித்த தொகையை நீங்கள் மீளப் பெறலாம். சுகாதார சேவையின் அனைத்துப் பற்றுச்சீட்டுகளையும் உங்களுடன் வைத்திருங்கள், ஏனெனில் பணத்தை மீளப் பெற உங்களுக்கு அவை தேவைப்படும்.

மருத்துவரைப் பார்த்த பிறகு பணத்தை எப்படி மீளப் பெறுவது என்று கேட்க, **132 011** என்ற எண்ணில் Medicare இனை அழையுங்கள்.



# மருத்துவர் சந்திப்பை முன்பதிவு செய்தல்

பெரும்பாலான சுகாதார சேவைகளுக்கு நீங்கள் சந்திப்பை முன்பதிவு செய்ய வேண்டும். தொலைபேசியூடாக அல்லது சுகாதார சேவைக்கு நேரடியாக வருகை தரும் போது மருத்துவர் சந்திப்பை முன்பதிவு செய்வதற்கு உதவியாக, இந்த வழிகாட்டியைப் பயன்படுத்தலாம்.

### மருத்துவர் சந்திப்பை முன்பதிவு செய்தல்

நீங்கள் மருத்துவர் சந்திப்பொன்றை மேற்கொள்ளும் போது, இவற்றைக் வழங்க வேண்டியிருக்கும்:

- உங்களது பெயர்
- உங்களது பிறப்புத் திகதி
- எந்த மருத்துவரைப் பார்க்க விருப்புகிறீர்கள்
- நீங்கள் எந்த நாளில் எந்த நேரத்தில் மருத்துவரைப் பார்க்க விரும்புகிறீர்கள்

### நீங்கள் மருத்துவர் சந்திப்பு முன்பதிவொன்றை மேற்கொள்ளும்போது, பின்வருவனவற்றைக் கேட்கலாம்:

- மருத்துவர் பல்க் பில்லிங் செய்கிறாரா
- மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவையெனில், கோருவது

அவுஸ்திரேலியாவில் உள்ள மருத்துவர் ஒருவரிடம் சந்திப்பை முன்பதிவு செய்யும் போது, சரியான நேரத்திற்கு வருகை தருவது முக்கியமானதாகும்.



# மருத்துவ நிபுணர் ஒருவரிடம் செல்லல்

மருத்துவ நிபுணர்கள் என்பவர்கள் மருத்துவத்தின் குறித்ததொரு விடயப்பரப்பில் சிறப்புத் திறன்களைக் கொண்ட மருத்துவர்கள் ஆவர், எடுத்துக்காட்டாக, இதய மருத்துவர்கள் (இதய மருத்துவ நிபுணர்கள்) மற்றும் தோல் மருத்துவர்கள் (தோல் மருத்துவ நிபுணர்கள்). அவுஸ்திரேலியாவில் ஒரு மருத்துவ நிபுணரை சந்திப்பதற்கு உங்கள் மருத்துவரின் பரிந்துரைப்புத் தேவை.

பரிந்துரைக் கடிதமானது உங்கள் உடல்நலப் பிரச்சனையைப் பற்றி ஒரு நிபுணரிடம் தெரிவிக்கின்றது. நீங்கள் பொது மருத்துவமனையில் இருக்கின்ற மருத்துவ நிபுணர் ஒருவரைப் பார்க்க வேண்டும் என உங்கள் மருத்துவர் விரும்பினால், அவர், குறித்த மருத்துவ நிபுணரிடம் உங்களுக்கான சந்திப்பு முன்பதிவைக் கோருவார். உங்கள் சந்திப்புத் திகதியானது உங்கள் உடல்நலப் பிரச்சனையைப் பொறுத்தது.

நீங்கள் ஒரு தனியார் மருத்துவ நிபுணரைப் பார்க்க வேண்டும் என உங்கள் மருத்துவர் விரும்பினால், சந்திப்பு முன்பதிவை மேற்கொள்ள, நீங்களே குறித்த நிபுணரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

## மருந்துகள், மருந்தகங்கள் மற்றும் வேதியியலகங்கள்

அவுஸ்திரேலியாவில், நீங்கள் மருந்துகள் அல்லது பிற சுகாதாரப் பொருட்களை வாங்கும் இடம் மருந்தகம் (pharmacy) அல்லது 'வேதியியலகம்' ('chemist') என்று அழைக்கப்படுகிறது. அவசர கவனம் தேவையற்ற காயங்கள், நோய் மற்றும் பிணி பற்றி நீங்கள் மருந்தகத்தில் இலவச ஆலோசனைகளையும் கோரலாம்.

உங்கள் மருத்துவர் நீங்கள் மருந்துகளை உட்கொள்ள வேண்டும் என விரும்பினால், அவர் உங்களுக்குப் 'பரிந்துரையை' (prescription) அல்லது 'மருந்துச் சீட்டை' ('script') தருவார். உங்களது மருந்தைப் பெற்றுக்கொள்ள, மருந்தகத்தில் உள்ளவர்களிடம் இந்த மருந்துச் சீட்டைக் கொடுக்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவில், மக்கள் தங்களுக்குத் தேவையான மருந்துகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, பல பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் விலையின் ஒரு பகுதியைஅரசாங்கம் செலுத்துகிறது. இந்தத் தள்ளுபடியைப் பெற்றுக் கொள்ள, உங்கள் medicare அட்டையை மருந்தகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

உங்களிடம் Centrelink சலுகை அட்டை அல்லது ஓய்வூதிய அட்டை இருந்தால், அதையும் எடுத்துச் செல்லுங்கள். அது உங்கள் மருந்துகளை இன்னும் மலிவாகப் பெற உதவும்.

பல மருந்துகளுக்கு, மருந்துச் சீட்டு தேவையில்லை. தலைவலி அல்லது தடுமல் போன்ற சிறிய உடல்நலப் பிரச்சனைகளுக்கான மருந்துகளை மருந்தகத்தில் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் வாங்கலாம். இவை "பரிந்துரைச் சீட்டின்றிக் கிடைக்கும் மருந்துகள்" ('over the counter') என்றழைக்கப்படுகின்றன.



ACT அரசு தயாரித்த 'Using health services in the ACT' என்ற ஆவணமே இந்த ஆவணத்திலுள்ள தரவுகளுக்கான மூலம் என்பதை அறியத்தர விரும்புகிறோம்.

centre for culture, ethnicity &health